1972 மார்ச் 8]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எழுத்தையும் பேச்சையும் தடைப்படுத்துவதால் எதுவும் நின்றுவிடாது. இது காகித உற்பத்தி பற்றிய பிரச்னை. புத்தக உற்பத்தி பற்றிய பிரச்னை அல்ல.

ஜலகண்டாபுரத்துக்கு தொழிற்பேட்டை

* 364 வினா—**திரு. எம் சுரேந்திரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா ஜலகண்டாபுரத்தில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இல்லை.

பஞ்சு இறக்குமதி

* 365 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு பேல் பஞ்சு இறக்குமதி செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மொத்தம் சுமார் 10.2 லட்சம் பேல்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வெளிநாட்டிலிருந்து சில ஆண்டுகளாக நூறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு இறக்குமதியாகிறது என்ற செய்தியை நான் பார்த்தேன். இப்போது தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டில் இருந்தும் வடநாட்டிலிருந்தும் பஞ்சு வந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பல்லிடங்களில் நீள இழைப் பருத்தி உற்பத்தி செய்கிறார்கள். அப்படி உற்பத்தி செய்யப்படுகிற இடங்களில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் ஏக்கரேஜை அதிகப்படுத்தாவிட்டாலும் உற்பத்தியையாவது அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?